# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
## மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு (MoMDE)
## சுற்றுச்சூழலமைவு பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டம் (ESCAMP)

**SUPPLY AND DELIVERY OF 40 Nos. OF GPS IRIDIUM RADIO COLLARS FOR THE DEPARTMENT OF WILDLIFE CONSERVATION**
**CREDIT No.: 5792 - LK**

**CONTRACT No.: ESCAMP/DWC/20822/GO/RFB**

1. சுற்றுச்சூழலமைவு பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத்தின் ஆகுசெலவிற்காக உலக வங்கியிடமிருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது கடனொன்றைப் பெற்றிருப்பதுடன் இக்கடன் பெறுகைகளின் ஒரு பகுதியை "supply and delivery of forty (40) Nos. of GPS Iridium Radio Collars with additional equipment for the Department of Wildlife Conservation" என்பதன் ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவிற்கு செலுத்துவதற்காக உத்தேசிக்கின்றது.

2. வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்காக மேலதிக உபகரணங்களுடனான நாற்பது (40) எண்ணிக்கையுடைய GPS Iridium Radio Collars இன் வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் சார்பாக செயற்திட்ட பெறுகைக் குழுத்தலைவர் இப்போது அழைக்கின்றார்.

3. கேள்விதாரரொருவருக்காக மற்றும் அவரின் சார்பாக முகவரொருவர் அல்லது உபமுகவர் அல்லது பிரதிநிதி அல்லது பெயர் குறிப்பிட்டுள்ளவர் இலங்கையின் 1987 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க சட்டத்தின் கீழ் கேள்வியொன்றிற்கு விண்ணப்பிப்பதற்கு முன்னராக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்துடன் பதிவு செய்தல் வேண்டும்.

4. விலைமனுக்கோரல் உலக வங்கியின் வழிகாட்டிகளில் பின்வருமாறு திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறான சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறைகளினூடாகவே நடாத்தப்படும். ''2014 ஜுலை திருத்தப்பட்டவாறான 2011 சனவரி வழங்கப்பட்ட உலக வங்கியின் கடன்பெறுநர்களுக்கான IBRD கடன்கள் மற்றும் IDA வரவுகள் மற்றும் மானியங்கள் ஆகியவற்றின் கீழான பண்டங்கள், வேலைகள் மற்றும் உசாத்துணையற்ற சேவைகள்''. அத்துடன் பெறுகை வழிகாட்டிகளில் நிருணயிக்கப்பட்டவாறு தகுதியுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் பங்குபற்றலாம். மேலதிகமாக, ஆர்வ மோதலில் உலக வங்கியின் கொள்கையை தயவு செய்து 1.6 மற்றும் 1.7 ஆகிய பந்திகளில் பார்க்கவும்.

5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் ESCAMP செயற்திட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் 2017.11.20 ஆம் திகதி வரையும் மு. ப. 9 மணியிலிருந்து பி. ப. 4 மணி வரையும் இலவசமாக பரீட்சிக்கலாம்.

6. மீளளிக்கப்படாத கட்டணமாக இலங்கை ரூபாவில் 5,000 ஐ செலுத்திய பின்னர், கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்தில் ESCAMP இன் கணக்காளரிடம் செலுத்தப்படல் வேண்டும்.

7. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் (நகல் பிரதி மற்றும் மூலப் பிரதி ஆகியன தனித்தனியாக) 2017.11.21 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். இலத்திரனியல் மூலமான விலைமனுக்கோரல் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2017.11.21ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு பத்தரமுல்ல, ரஜமல்வத்த பாதை, 82ஆம் இலக்கத்திலுள்ள 'சம்பத்பாய' மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, ESCAMP செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு அலுவலகத்தில் விலைமனுதாரர்களின் அல்லது விலைமனுதாரர்களின் பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் பகிரங்கமாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

8. 2017.10.30 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு பத்தரமுல்ல, கொஸ்வத்த, தலங்கம வடக்கு, ஹொரகஹாகந்த ஒழுங்கை, 363/ஈ என்ற முகவரியிலுள்ள சுற்றுச்சூழலமைவு பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்ட அலுவலகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடந்தேறும்.

9. அனைத்து விலைமனுக்களும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டு இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் ''உறுதி செய்யப்பட்ட உத்தரவாதமுடைய'' இன்னொரு நாட்டில் செயற்படும் வங்கியொன்றினால் 6,400 அ.ஐ.டொலர் தொகைக்கான விலைமனுப் பிணைமுறியொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. சித்திகரமான விலைமனுதாரர்/உள்ளூர் முகவர்/விலைமனுதாரரின் பிரதிநிதியானவர் இலங்கை தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் (TRC) பதிவு பெறல் வேண்டும் அல்லது பதிவொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

11. பெறுகைக் குழுவானது அனைத்து விலைமனுக்களையும் அல்லது விலைமனுக்களின் பகுதியொன்றை நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டிருப்பதுடன் மேலதிகமாக அனைத்து உரிமைகளையும் அவர்கள் கொண்டுள்ளார்கள்.

**தலைவர்,**
**செயற்திட்ட பெறுகைக் குழு,**
**சுற்றுச்சூழலமைவு பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம்,**
**மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு,**
**இல.: 363/ஈ, ஹொரகஹாகந்த ஒழுங்கை,**
**கொஸ்வத்த, தலங்கம வடக்கு,**
**பத்தரமுல்ல, இலங்கை.**

**தொலைபேசி : + 94 011-3355589**
**தொலைநகல் : + 94 011-2791278**

**இணையதளம்: www.environmentmin.gov.lk**
**மின்னஞ்சல்: meharsinghlaxana@gamil.com**

09.10.2017